# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 06 | புவியியல் | நேரம் : |
| --- | --- | --- |
| | சுட்டெண் : ........................................................... | 2.00 மணித்தியாலம் |

பகுதி - I

- மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக

1. உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்,
   1) வவுனியா 2) கிளிநொச்சி 3) யாழ்ப்பாணம் 4) முல்லைத்தீவு

2. நுவரெலியா மாவட்டம் உள்ளடங்கும் மாகாணம்,
   1) மேல்மாகாணம் 2) மத்தியமாகாணம் 3) ஊவாமாகாணம் 4) தென்மாகாணம்

3. திசைகளின் அமைவிடங்களை அறிந்துகொள்வதற்கு அடிப்படையாக அமையும் திசை,
   1) கிழக்கு 2) வடக்கு 3) தெற்கு 4) மேற்கு

4. பின்வரும் புவியில் அம்சங்களில் மனிதனால் உருவாக்கப்பட்டவை,
   1) வீதிகள், கட்டடங்கள், பயிரிடப்பட்ட நிலங்கள்
   2) சமவெளிகள், குளங்கள், ஆறுகள்
   3) விளையாட்டு மைதானம், நீர்வீழ்ச்சி, அணைக்கட்டு
   4) மலைகள், நதிகள், வயல் நிலங்கள்

5. மண்ணை இளகச் செய்வதற்கும், செழிப்படையச் செய்வதற்கும் பங்களிக்கும் உயிரினம்
   1) கறையான் 2) அகளான் 3) மண்புழு 4) பெருச்சாளி

6. நீர்த்தேக்கம், கடல், ஆறு போன்ற நீர்நிலைகளுக்கு அண்மையில் வாழ்கின்ற மக்கள் பிரதானமாக ஈடுபடுகின்ற தொழில்,
   1) விவசாயம் 2) மட்பாண்டத்தொழில்
   3) மரத்தளபாடக் கைத்தொழில் 4) மீன்பிடித்தொழில்

7. தாவரங்களின் வளர்ச்சிக்கு மிக அவசியமான வாயு,
   1) ஒட்சிசன் 2) நைதரசன் 3) ஐதரசன் 4) ஆகன்

8. இலங்கை அரசாங்கம் மருந்து வகைகளை சலுகை விலைகளில் விநியோகம் செய்வதெற்கென உருவாக்கியுள்ள நிலையம்,
   1) சலுசலா 2) e - தக்சலாவ
   3) ஒசுசலா 4) விதாதா வளநிலையம்

9. மண்ணரிப்பைத் தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய பொருத்தமான நடவடிக்கை
   1) புல்நிலங்களில் விலங்குகளின் மேய்ச்சல் 2) காடுகளை அழித்தல்
   3) மூடுபயிர்கள் வளர்த்தல் 4) நிலத்தில் குழிகளை வெட்டுதல்

10. இலங்கை அரசினால் இலவசமாக வழங்கப்படுகின்ற பொதுச்சேவை,
    1) கல்விச்சேவை 2) மின்சார சேவை
    3) போக்குவரத்துச் சேவை 4) தொடர்பாடற் சேவை

11. சாடிகள், ஓடுகள், செங்கற்கள் போன்ற உற்பத்திப் பொருட்களுக்கான மூலப்பொருள்,
    1) வெண்களி 2) களிமண் 3) சிலிக்கா மணல் 4) இல்மனைற்

12. சூழல் பாதிப்புக்களைக் குறைவாக ஏற்படுத்தும் சக்திமூலம்
   1) சூரியசக்தி   2) விறகு   3) உயிரியல் வாயு   4) நிலநெய்

13. மின்சக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பம்
   1) அடிக்கடி குளிர்சாதனப் பெட்டியை திறந்து மூடல்
   2) பகல் நேரங்களிலும் மின்குமிழை ஒளிரவிடல்
   3) பல மின்குமிழ்களுக்கு ஒரு மின் இணைப்பைப் பயன்படுத்தல்
   4) கச்சிதமான ஒளிர்வுள்ள மின்குமிழ்களைப் பயன்படுத்தல்

14. குறைவான சக்தியைப் பயன்படுத்தி பாதுகாப்புடனும், இலகுவாகவும், விரைவாகவும் சமைக்க உதவும் அடுப்பு வகை
   1) மின்னடுப்பு   2) பயனுள்ள விறகு அடுப்பு
   3) வாயு அடுப்பு   4) மண்ணெய் அடுப்பு

15. நீர்ப்பற்றாக்குறையினால் ஏற்படும் பிரச்சினைகளில் ஒன்று
   1) தாவர வளர்ச்சி   2) சுத்தமான குடிநீர் கிடைத்தல்
   3) நீர்மின் உற்பத்தி பாதிப்புறல்   4) வெள்ளப்பெருக்கு

16. வளி மாசடைவதால் ஏற்படுகின்ற சுவாசத்தொகுதி தொடர்பான நோய்கள்
   1) டெங்கு, இருமல்   2) ஆஸ்துமா, காய்ச்சல்
   3) பீனிசம், சுவாசப்பை புற்றுநோய்   4) எபோலா, தடிமன்

17. உலகிலேயே மிகப்பெரிய கண்டம்
   1) வட அமெரிக்கா   2) ஆசியா   3) ஆபிரிக்கா   4) அவுஸ்திரேலியா

18. புராதன காலத்திலிருந்தே சர்வதேச வியாபாரத்துடன் தொடர்புபட்டிருந்த இலங்கையின் இயற்கைத் துறைமுகம்
   1) காலி   2) திருகோணமலை   3) கொழும்பு   4) காங்கேசன்துறை

19. இலங்கையில் சர்வதேச விமானநிலையங்கள் அமைந்துள்ள இடங்கள்
   1) சீனன்குடா, பலாலி   2) மத்தள, சீனன்குடா
   3) இரத்மலானை, பலாலி   4) மத்தள, கட்டுநாயக்கா

20. கண்டியில் அமைந்துள்ள மிகப் பிரபல்யமான சமயத்தலம்
   1) எம்பக்கே தேவாலயம்   2) மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்
   3) தலதா மாளிகை   4) அலுவிகாரை

(2×20=40 புள்ளிகள்)

பகுதி - II

• **முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.**


01) 1. மூன்றாம் தவணையில் புவியியல் பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகையைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

2. அக்கணிப்பீட்டைப் பூர்த்தி செய்த பாட அலகினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

3. அக்கணிப்பீட்டைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

4. மேற்படி கணிப்பீட்டைப் பூர்த்தி செய்ததால் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் இரண்டு தருக. (04 புள்ளிகள்)

02) கீழே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் விடயங்களை உரிய இடங்களுக்கு எதிரே அடைப்புக்குறிக்குள் எழுதுக.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஆட்டிக் சமுத்திரம் | (........) | 7. | மடகஸ்கார் | (........) |
| 2. | தாய்வான் | (........) | 8. | தென் அமெரிக்கா | (........) |
| 3. | சிசிலி | (........) | 9. | கிறீன்லாந்து | (........) |
| 4. | அவுஸ்திரேலியா | (........) | 10. | கியூபா | (........) |
| 5. | ஐரோப்பா | (........) | 11. | ஆபிரிக்கா | (........) |
| 6. | இலங்கை | (........) | 12. | அத்திலாந்திக் சமுத்திரம் | (........) |

(12 புள்ளிகள்)

03) 1. இலங்கையின் நிர்வாகப் பிரிவுகளில் மிகப்பெரிய, மிகச்சிறிய நிர்வாகப் பிரிவுகளை முறையே குறிப்பிடுக.

2. a) மிகச் சரியாகத் திசையை அறிந்துகொள்ளப் பயன்படுத்தும் கருவி எது?

b) வடக்குத்திசைக்கும் மேற்குத்திசைக்கும் இடையே அமைந்துள்ள திசையைப் பெயரிடுக.

c) சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்து இரு கைகளையும் இரண்டு பக்கமும் நீட்டி நிற்கும்போது உமது வலதுகை காட்டி நிற்கும் திசை எது?

3. வானிலை மூலகங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
4. இலங்கையில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற இயற்கை அனர்த்தங்கள் மூன்று தருக.

(3×4=12 புள்ளிகள்)

04) 1. இலங்கைக்கு வருகைதருகின்ற இடம்பெயர் பறவைகள் மூன்றைக் குறிப்பிடுக.
2. பின்னவரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய விலங்குகளைப் பெயரிடுக.
   a) மலேரியா, டெங்கு போன்ற நோய்களைப் பரவச் செய்யும் நோய்காவிகள்
   b) பயிர்களுக்கு அழிவை ஏற்படுத்தும் நத்தைகளை அழிப்பது
   c) பல்வகையான கழிவுப்பொருட்களை உக்கச் செய்வதற்கு உதவுவது
3. தாவரங்களினால் மனிதனுக்குக் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக.
4. எமது நாட்டில் இடம்பெறுகின்ற பின்வரும் பாரம்பரிய கைத்தொழிலுக்குப் பிரபல்யமான பிரதேசங்களைக் குறிப்பிடுக.
   a) பிரம்பு உற்பத்தி
   b) மரத்தளபாடம்
   c) பாய்கள்

(3×4=12 புள்ளிகள்)

05) 1. நீரிலிருந்து பெறுகின்ற பயன்கள் மூன்று தருக.
2. சக்திக்கான கேள்வி அதிகரித்துச் செல்வதற்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
3. வளி மாசடையும் சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக.
4. சூழலில் சேரும் கழிவுப்பொருட்களின் அளவைக் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிடுக.

(3×4=12 புள்ளிகள்)

06) 1. இலங்கை அமைந்துள்ள சமுத்திரம், கண்டம் என்பவற்றை முறையே குறிப்பிடுக.
2. பின்வரும் தீவுகள் அமைந்துள்ள சமுத்திரங்களைப் பெயரிடுக.
   a) யப்பான்
   b) பிரித்தானியா
   c) மாலைதீவு
3. இலங்கையின் அமைவிடம் காரணமாக ஏற்பட்டுள்ள நன்மைகள் மூன்று தருக.
4. இலங்கையில் வாழ்கின்ற மதத்தவர்கள் கீழே தரப்பட்டுள்ளது. அவர்கள் கொண்டாடுகின்ற பண்டிகைகள் ஒவ்வொன்று எழுதுக.
   a) இந்துக்கள்
   b) கிறிஸ்தவர்கள்
   c) பௌத்தர்கள்

(3×4=12 புள்ளிகள்)

kalvi.lk


2025
1ம் தவணை வகுப்புகள்
தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
ஆரம்பம் 01.01.2025
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.
அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...
Education கல்வி அධ්‍යාපන
Kalvi.lk
Whatsapp
075 287 1457